பதிவு எண்—M 5720 வெள்ளிக் கிழமையில குருகுலத் தாள

247

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சீர்நுண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை–6 குருகுலம், மாம்பாக்கம்; செய, வைகாசி; 14—5—54 தளிர்–30

14 JUL 1954 MADRAS

குருகுலத்தின் குறிக்கோள்:

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

## எளிய வழி

நேருக்கு நேரான வாழ்க்கை முறையிலுங் கூட மக்களுக்குப் பலவேறு ஐயங்கள் கலக்கங்கள் உண்டாய்விடுகின்றன; காரணம், வாழ்க்கை வகையிலும், நுணுக்கமும் மறைவியக்கமுமான பற்பல நிகழ்ச்சிகள் அடிப்படை கொண்டிருப்பதனாலேதான்.

ஆசிரியர் திருவள்ளுவரால் உலகுக்கு இவ்வகையில் எவ்வளவோ ஆறுதலுண்டு. எவ்வகை ஐயங்களுக்கும் கலக்கங்களுக்கும் தீர்வு காண்கின்றார் திருவள்ளுவர். கண்டு உலகுக்கும் தீர்த்து வைத்து உய்வு உண்டாக்குகின்றார்.

உலகத்தில், செல்வம் உண்டாவதற்கு வழி எப்படி? கல்வி உண்டாவதற்கும் அப்படியே ஞானம் உண்டாவதற்கும் வழிகள் எப்படி! என்று வழி துறை தெரியாமல் மக்கள் ஏங்குகின்றனர். வழி கூறுவார் ஆசிரியர்.

ஒவ்வொருவரும் தம்மை அறிவிலும் முயற்சியிலும் செய்கையிலும் ஒழுக்கத்திலும் உணர்விலும் உயர்த்திக் கொள்க என்பதே ஆசிரியரின் ஒரே வழி! சூழல், தானே அமையும் என்பது அவர் கருத்து.

எண்ணம் உயர்வாகவும் உண்மையாகவும் இருந்து, அதற்கேற்றபடி உழைப்பும் ஒழுக்கமும் இருந்தால், பொருளையும் கல்வியையும் ஞானத்தையும் நாம் தேடவேண்டியதில்லை; நம்மை அவை தேடிக்கொண்டு வரும் என்கிறார் ஆசிரியர். தேடும் கவலை நம்முடையதன்று, அவற்றினுடையதாம்!

"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா ஊக்கம் உடையானுழை" "கேள்வியுடையார் அவியுணவின் ஆன்றாரோ டொப்பர்;" என்று பொருளும் கல்வியும் தாமே வந்தடைதலைக் கூறும் ஆசிரியர் "கதங் காத்துக் கற்றடங்க லாற்றுவான் செவ்வி அறம் பார்க்கும் ஆற்றின் நுழைந்து" என்னும் இத் திருக்குறள் வாயிலாக ஞானத் திருவும் தானே வந்தடைதல் கூறினார் எளிய இனிய இவ்வழியில் மக்கள் மாண்புடன் இருக்கப் பழகுதற்குக் கடா கசப்பு!

கதங் காத்துக் கற்றடங்க
லாற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின்
நுழைந்து.

கதம் காத்துக் கற்று அடங்கல் ஆற்றுவான் செவ்வி—வெகுளி தோன்றுமற் காத்துக்கொண்டு உண்மையை ஆழ்ந்து ஆராய்ந்து அதன்கண் அடங்கியிருத்தலைச் செய்ய வல்லவனது உற்ற நேரத்தை, அறம் பார்க்கும் ஆற்றின் நுழைந்து – அறம் என்னும் புண்ணியம் உரிய முறைமையிற் புகுந்து எதிர்ப்பார்த்து நிற்கும்.

நன்மைக்குரிய திரு, அதாவது ஞானத்திரு ஈண்டு 'அறம்' எனப்பட்டது. தூயோர்க்குரிய 'புண்ணியம்' என்பதும், இறைவற்குரிய 'புண்ணியன்' என்னும் பெயரும் இத் திருவுடைமையை உணர்த்தும்.

வெகுளியுள்ள இடத்தில் அமைதி நிலவாமையின், கற்றலும் அடங்கலும் வாயாமை கருதிக் கதம் காத்துக்கோடல் கடமையாயிற்று. காத்தலும் கற்றடங்கலும் செயற்கரிய செயலாதலின் அவ் வல்லமை கருதி, 'ஆற்றுவான்' என்னும் ஆற்றலுணர்த்து மொழியாற் கூறினார்.

செவ்வி, இனியனுங் காலம்; அறத்திரு, வலிந்து சென்றடையும் என்றதற்குச் 'செவ்வி பார்க்கும்' என்றார்.

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

**6-ம் ஆண்டுக் கையொப்பம்**

**(23-10-53 முதல்)**

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளிநாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |
| ஆயுள்—கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.

| இலை | செய, வைகாசி, | தளிர் |
|---|---|---|
| 6 | 14-5-54 வெள்ளி. | 30 |

# சோழ நாட்டுத் திருப்பயணம்

அன்பர்கள் மிகவும் ஆர்வத்தோடு எதிர்நோக்கியிருக்கும் சோழ நாட்டுத் திருப்பயணம் 2-6-54 அன்று தொடங்குகிறது.

ஆசிரியரவர்கள் அன்றிரவு சென்னையிலிருந்து தொடரும் அன்பர்கள் மாணவர்களுடன் புறப்பட்டு, 3-6-54 காலை சிதம்பரஞ் சேர்வார்கள். தில்லைத் திருப்பதியிலிருந்து மூன்று கிழமைகள் வரை, வழிபட முடிந்த சோழநாட்டுத் திருப்பதிகளை வழிபட்டு மீள்வார்கள். எஞ்சும் அந்நாட்டுத் திருவூர்களை அடுத்த ஆண்டுகளில் வழிபடுவார்கள்.

ஆசிரியரோடு திருப்பயணம் செய்ய விரும்புவோர், ரூபா ஒன்று செலுத்தி (முன்னேற்பாட்டுச் செலவுகளுக்கு 25-5-54 செவ்வாய்க்குள் தம் பெயரைப் பதிவு செய்துகொள்ள வேண்டும். குருகுலத் தொண்டர் திரு. ப. வேதாசலம் அவர்களிடம் (விரிவுரைக் காலங்களிலும், 1—60 ரட்டன் பசார், சென்னை 3. முகவரியிலும்) தெரிவித்துப் பதிவு செய்துகொள்ளலாம். தம் குடும்பத்திலிருந்து வருபவர்கள் எத்தனைப் பேர் என்பதையும் தெரிவிக்க வேண்டும்.

குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு வந்து "நானும் வருகின்றேன்" என்று சொல்லிச் சேர்த்துக் கொள்ளவேண்டுவது வீண் தொல்லையாகவும், இயலும் ஏற்பாடுகளுக்கு இடர் செய்வதாகவுமே இருக்கும்.

தனியே கொடுத்துள்ள பட்டியலில் கண்டபடி சில இடங்களைத் தங்கும் நடுவிடங்களாகக் கொண்டு சுற்றியுள்ள தலங்களை நாள் ஒன்றுக்கு இரண்டு மூன்று எனப் பார்க்க எண்ணம். வாய்ப்புள்ள வேறு இடங்களிலும் இரவில் தங்க நேரலாம்.

நாடோறும் காலை நேரங்களில் தங்குமிடங்களில் வழிபாடும், ஆசிரியர் அவர்களால் திருக்கழுக்குன்றப் பதிகங்களுக்கு விளக்கங்களும் (இப்பெயரால் குருகுல வெளியீடு ஒன்று திருமுறைப் பாடல்கள் எல்லாவற்றையும் பின்வந்த பாடல்களில் முதன்மையானவற்றையும் தொகுத்து வெளிவந்திருக்கின்றது) பிற்பகலில் பொதுக் கூட்டங்களும் சந்தி நேரங்களில் திருக்கோயில் வழிபாடுகளும் நடைபெறும்.

கூட்டங்களில் திருமுறைகள், சமயாசிரியர்கள், சைவ சமயக் கொள்கைகள், திருக்கழுக்குன்ற விழா, மக்கள் வாழ்க்கை முன்னேற்றம், குருகுலம் முதலியன பற்றிய பரப்புரைகள் (பிரசாரங்கள்) செய்யப் பெறும். அங்கங்கே உள்ள பெருமக்களும் அறிஞர்களும் குருகுல மாணவர்களும், அன்பர்களும், ஆசிரியரவர்களும் சொற்பொழிவாற்றுதல் கூடும்.

வழிபடும் இடங்களில் அவ்வத் திருக்கோயில் பதிகங்களை ஆங்காங்குள்ள ஓதுவார்களைக் கொண்டும், சேரும் இடங்களில் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் தேவார ஆசிரியர் மாணவர்களைக் கொண்டும், குருகுலத்தாரைக்கொண்டும், இயன்ற பெற்றி இசையோடு ஓதுவிக்கப் பெறும்.

ஒவ்வொரு திருக்கோயில் வழிபாட்டின் இறுதியிலும் ஆசிரியர் சில நிமிடங்கள் அத்திருக்கோயில்பற்றி (பதிகங்களை ஒட்டி), தமக்குத் தோன்றும் கருத்துக்களைத் தெரிவித்து அங்குள்ளார்க்குத் தம் வாழ்த்தியல் நன்றியுரையைக் கூறுவார்கள்.

நாட்கள் குறைவாய்ப் பார்க்க வேண்டிய தலங்கள் நிரம்ப இருத்தலால் நாள் ஒன்றுக்கு மூன்று தலங்கள்போலப் பார்க்க வேண்டியிருக்கிறது. வெயிலுக்கு முன்னும் பின்னுமே பெரும்பாலும் பயணங்களைச் செய்ய வேண்டியிருக்கும். ஆதலின் அன்பர்கள் தனித் தனியே கோயில்களில் அருச்சனை முதலியன வைத்துக்கொண்டு வழிபாட்டு நேரத்தை நீட்டாதிருப்பது நல்லது.

எல்லாருக்கும் சேர்த்து ஆசிரியர்வழி ஒரே முறையில்

மூலவருக்கு மட்டும் அருச்சனைகளும் பிள்ளையார், தட்சிணாமூர்த்தி, முருகர், நடராசர், அம்மைக்குத் தீபாராதனையும் கொள்ளலாம் மலர், பழம், தேங்காய், கற்பூரம், ஊதுவத்தி, வெற்றிலை பாக்கு, குருக்களுக்குத் தக்க காணிக்கை திருக்கோயில் பணியாளர்கட்கு, அன்பளிப்பு வகைகளில் இயன்ற அன்புடன் செலவிட வேண்டும். பெரிய கோயில்களில் சிறிது கூடவும் ஆகக் கூடும். இவற்றையும், கூட்டங்கள் நடத்தல், வேறு பொது ஏற்பாடுகள், சில்லரைச் செலவு முதலியவற்றையும் திருப்பயணத்தில் கலந்துகொள்கிற அன்பர்கள் விரும்பினால் ஏற்றுச் செய்யலாம். பெயர்ப் பதிவு செய்கிற போது அவரவர்கள் தம் விருப்பத்தைத் தெரிவிக்கலாம்.

25-5-54 க்குப் பின் சேரும் அன்பர்கள், முன்வந்து செலவுகளை ஏற்கும் திருச் செயலர்கள், (கைங்கரியதாரர்கள்) எண்ணிக்கைக் கேற்றபடி செலவினத்தைப் பற்றி எல்லாம் ஆராய்ந்து, அமையும் நிகழ்ச்சி நிரலுடன் 30-5-54 ஞாயிறு அன்று பிற்பகல் மாலை 4-மணிக்குச் சென்னைச் சிவனடியார் திருக்கூட்ட மண்டபத்தில் நடைபெறும் கூட்டத்தில் தெரிவிக்கப் பெறும்.

பொதுவாகச் சோழநாட்டுத் திருப்பயணம் இப்போதுள்ளபடி இவ்வாண்டு சிதம்பரம் முதல் கும்பகோணம்வரை நிகழும். அடுத்த ஆண்டில் மீண்டும் கும்பகோணத்திலிருந்து தொடங்கித் தஞ்சாவூர் திருச்சி வரையும் இவ் வழிகளிலும் நடைபெறும். பாடல்பெற்ற சோழநாட்டுத் திருவூர்கள் மொத்தம் 190 ஆகும்.

# சோழநாட்டுத் திருப்பதிகளிற் சில

இவ்வாண்டு நடுவிடங்களாகக் கொண்டு தங்கக்கூடிய இடங்களும், இரயில்வே நிலையங்களும், சுற்றி வழிபடக்கூடிய திருவூர்களும், அவைகள் நிலையத்திலிருந்து எவ்வளவு தொலைவு என்னும் விவரங்களும்:—

(1) சிதம்பரம் (நிலை):

தில்லை $\frac{3}{4}$ கல்
திருவேட்களம் $\frac{3}{4}$ கல்
திருநெல்வாயில்(சிவபுரி) $1\frac{1}{2}$ கல்
திருகழிப்பாலை (காரைமேடு; $1\frac{1}{2}$ கல்.
திருநாரையூர் (பஸ் வழி) 10 கல்

(2) கொள்ளிடம் (நிலை):

திருநல்லூர்ப்பெருமணம் (ஆச்சாபுரம்) 3 கல்
திருமயேந்திரப்பள்ளி (கோயிலடிப்பாளையம்) 7 கல்

சீர்காழி (நிலை):

சீர்காழி $\frac{3}{4}$ கல்
திருக்கோலக்கா (திருத்தாளமுடையார் கோயில்) $\frac{3}{4}$ கல்
திருக்குருகாவூர்வெள்ளடை (திருக்கடவூர்) 3 கல்.
திருக்கலிக்காமூர் (அன்னப்பன்பேட்டை) 6 கல்.
திருப்பல்லவனீச்சரம் (காவிரிப்பூம்பட்டினம்) 8 கல்.
தென் திருமுல்லைவாயில் 8 கல்.
திருவெண்காடு (சுவேதாரண்யம்) 6 கல்.
கீழைத் திருக்காட்டுப் பள்ளி 8 கல்.
திருச்சாய்க்காடு 7 கல்.

(3) வைதீசுரன்கோயில் (நிலை):

திருப்புள்ளிருக்குவேளூர் $\frac{1}{2}$ கல்.
திருப்புன்கூர் $2\frac{1}{4}$ கல்.
திருக் கண்ணார்கோயில் (குறுமணக்குடி) $3\frac{1}{2}$ கல்.
திருக்காணாட்டுமுள்ளூர் 16 கல்.
திருஓமாம்புலியூர் 10 கல்.
மேலைக்கடம்பூர் 10 கல்.
திருப்பழமண்ணிப்படிக்கரை (இலுப்பைப் பட்டு) 15 கல்.
திருக்குரக்குக்கா (கோளிலி) 11 கல்.
திருக்கருப்பறியலூர் (மேலைக் காழி) 14 கல்.
திருவாழ்கொளிப்புத்தூர் 16 கல்.

(4) ஆனைத்தாண்டவபுரம் (நிலை):

திருநின்றியூர் $2\frac{1}{2}$ கல் (கஞ்சாறு: அருகிலுள்ள வைப்புத் தலம்)

நீடூர் (நிலை).

திருநீடூர் $\frac{1}{2}$ கல்
திருஅன்னியூர் (பொன்னூர்) 3 கல்.
திருக்குறுக்கைவீரட்டம் 3 கல்.

மாயூரம் (நிலை):

திருமயிலாடுதுறை $\frac{1}{4}$ கல்.
(வழுவூர் வீரட்டம், திருமூவலூர் அருகிலுள்ள வழிபடத் தக்க இடங்கள். -பாடலில்லை)

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

---

இவ்வாண்டுப் பயணத்துக்கு எல்லாச் செலவும் உட்பட ஒருவருக்குக் குறைந்து ரூபா ஐம்பது ஆகும் என்று தெரிகிறது.

—செய்தியாளர்.

# தற்கால விஞ்ஞானம்

இன்று விஞ்ஞானம் விரைவில் விருத்தியடைந்துகொண்டே வருகின்றது. அதனுடைய அபிவிருத்தியைப் பார்த்து ஜனங்கள் வியப்பையும் பயத்தையும் அடைந்துள்ளார்கள். நாம் பொறுமையோடு விசாரணை செய்வோமானால் இந்த விஞ்ஞான விருத்தியினால் சுகமும் சாந்தியும் விருத்தியடைந்தனவா என்பது விளங்கும். உண்மையில் அவைகள் விருத்தியடையவில்லை. உலகத்தில் உள்ளவற்றை அழிப்பதற்காகவே ஹஸ்திரங்களும் சஸ்திரங்களும் வேறு பொருள்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவைகளின் விருத்தியினால் உலகத்தில் விநாசமே ஒழிய வேறு எதுவும் காணப்படவில்லை.

நம்முடைய ரிஷிகளும் மகரிஷிகளும் இந்த எல்லா வஸ்துக்களையும் நன்றாக அறிந்திருந்தார்கள். அப்படியிருந்தும் அவர்கள் அவைகளை உபயோகப்படுத்தவில்லை. ஆத்ம உன்னதிக்குச் சாதனமான வழியை மட்டும் போதித்துச் சென்றார்கள். அதற்குக் காரணம் என்ன? ஜடவஸ்துக்களை உபயோகப்படுத்துவதால் பயங்கரமான நாசமும் ஆத்மாவின் மூல குணங்களின் கெடுதியும், தோஷமில்லாத பிராணிகளின் நாசமும் அதிகப் பணச் செலவும் வீணாகக் காலம் கழிவதும் உண்டாகும் என்பது அவர்களுக்கு நன்கு தெரியும்.

இந்த விஷயம் எல்லார்க்கும் தெரிந்தது. ஓர் அணுகுண்டுவை உபயோகப் படுத்துவதால் லக்ஷக்கணக்கான ரூபாய் செலவழிகின்றன. ஒரு தேசம் அணுகுண்டுவை உபயோகப் படுத்துவதால் லக்ஷக் கணக்கான பிராணிகள் நாசமடைகின்றன; அந்த அணுகுண்டுவைச் செய்வதற்காக லக்ஷக்கணக்கான ரூபாய் செலவழிக்கின்றன. ஒரு தேசம் அணுகுண்டுவைத் தயாரித்து உபயோகப்படுத்தினால் வேறொரு தேசமும் அதே மாதிரி செய்ய ஆரம்பிக்கின்றது. அணுகுண்டுவைத் தயாரிக்க எவ்வளவு பணம் செலவாகின்றதோ அதில் தம்பிடிக்கூடத் திரும்பக் கிடைப்பதில்லை. சம்ஹாரமும் துவேஷ விருத்தியும் உண்டாகின்றன. இத்தகைய கொடுமையான ஆயுதங்களால் உலகத்திற்கு நன்மை ஏற்படாது. இந்த வீணான செலவுகளை நிறுத்தித் துக்கிகள் ஏழைகள் ஆகியவர்களின் மேம்பாட்டிற்காக இந்தப் பொருளைச் செலவு செய்தால் கோடிக்கணக்கான ஜனங்களுக்கு நன்மை உண்டாகும். இந்த விதமான விஷயத்தை அறிந்து யாவருக்கும் சொல்வது மிகவும் அவசியமானது.

யந்திர வாதத்தினால் இன்று ஆயிரக்கணக்கான ஜனங்கள் கஷ்டப்படுகின்றார்கள். மனிதர்கள் ஏழைகளாயும் சக்தியற்றவர்களாயும், தைரிய மற்றவர்களாயும் ஆகிவிட்டனர். இவைகளுக்குக் காரணம் யந்திர வாதம்தான். அதாவது எல்லா விஷயங்களையும் யந்திரங்களின் உதவியினால் செய்து கொள்ளுதல் யந்திர வாதம் எனப்படும். எவ்வளவுக்கெவ்வளவு சாதனங்கள் விருத்தி அடைகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு உலகத்தில் துக்கமும் சாந்தமின்மையும் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. பழைய காலத்தில் நம்முடைய தேசம் எவ்வளவு சுகமுள்ளதாயும், குறைவற்றதாயும் இருந்தது. தேசத்தில் எவ்வளவு சாந்தி நிலவிற்று. இன்று நாலா பக்கங்களிலும் பயத்தின் நிழல் காணப்படுகின்றது. உலகத்தில் சாந்தமின்மை தோன்ற ஆரம்பித்து விட்டது. ஆனால், இப்பொழுது மனிதர்களுக்கு இந்த உண்மை இன்னும் விளங்கவில்லை.

ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன் இத்தகைய யந்திரங்கள் இல்லை. முன்னேற்றத்திற்கு அனுகூலமான சாதனங்களும் இல்லை. ஆனாலும், இப்பொழுது விஞ்ஞானத்திலும் என்ன என்ன விஷயங்கள் சித்தமாகின்றனவோ அவைகளெல்லாம் மகா பருஷர்களான ஞானிகளுக்கு முன்னமே தெரிந்திருந்தன.

நாம் சாஸ்திரங்களில் ஆகாயத்தில் செல்லும் விமானங்களைப் பற்றிப் படிக்கும்பொழுது அநேக ஜனங்கள் அதை நம்பாமல் பொய்யென்றும் கட்டுக்கதை என்றும் கூறினார்கள். ஆனால், இப்பொழுது உண்மையாகவே ஆகாய விமானங்களைப் பார்க்கும் பொழுது நம்முடைய முன்னோர்கள் எழுதியது உண்மைதான் என்று கூறுகின்றார்கள்.

ஜகதீஸ் சந்திரபோஸ் விஞ்ஞானக் கருவிகள் மூலம் வனஸ்பதி (மரம், செடி, கொடி புல் ஆகியவை) களில் ஜீவன் உண்டு என்றும், பிராணிகள் தங்கள் சுபாவத்தின்படி சுக துக்கங்களை அனுபவிக்கின்றன என்றும் அவை சிறிதாகவும் பெரிதாகவும் ஆகக் கூடுமென்றும் நிரூபித்த பிறகு வெளி நாட்டு விஞ்ஞானிகள் வனஸ்பதியிடத்தில் ஜீவன் உண்டு என்பதை நம்ப ஆரம்பித்தார்கள். ஆனால் நம்முடைய பழைய ஏட்டுப் பிரதிகளாயுள்ள

ஜைன சாஸ்திரங்களில் ஆயிரம் வருஷங்களுக்கு முன்னமேயே இந்த விஷயம் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

அநேக வருஷங்களுக்கு முன்பு ஜகதீஸ் சந்திரபோஸ் ஜெர்மனி தேசத்தில் வனஸ்பதியில் ஜீவன் உண்டு என்பதை நிரூபித்துக் காட்டும் பொழுது அந்தக்கூட்டத்தில் அவர் "இந்த விஷயம் எங்கள் நாடாகிய பாரத தேசத்திற்கு ஒரு புதிய செய்தியல்ல, எங்களுடைய முன்னோர்களும் மகா புருஷர்களுமான ஜைன ஆசிரியர்கள் என்ன கூறியுள்ளார்களோ அதையே நான் இப்பொழுது பிரமாண பூர்வமாக விளக்கியுள்ளேன்" என்று கூறி அதற்குத் திருஷ்டாந்தமாக ஆசாராங்க சூத்திரத்தையும் ஜீவாபிகம சூத்திரத்தையும் மேற்கோளாக எடுத்துக் கூறினார்.

ஜலகாயிக ஜீவன், வனஸ்பதி காயிக ஜீவன், ஓசையின் சக்தி, ரேடியோ, அணுகுண்டு, புகைப்படம் பிடித்தல் ஆகிய அநேக விஷயங்கள் நம் முன்னோர்களால் சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளன. அவைகளைத் தற்கால விஞ்ஞானிகள் கருவிகள் மூலம் பிரத்தியட்சமாக (கண்கூடாக) விளக்குகின்றார்கள். தற்கால விஞ்ஞானம் பூரணமாயில்லை. இதனால் ஒவ்வொரு நாளும் புதுப்புது ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. விஞ்ஞானிகளும் தங்களுடைய கொள்கைகளை அடிக்கடி மாற்றிக் கொண்டே வருகின்றார்கள். சிலவருஷங்களுக்கு முன்பு அமெரிக்கா கண்டத்தின் சமீபத்தில் ஆயிரக்கணக்கான மைல்கள் நீளமும் அகலமும் உள்ள ஒரு நீண்ட விசாலமான தீவு தோற்றத்திற்குத் தென்பட்டது. அதைப்பற்றி இது வரையில் செய்து வந்த ஆராய்ச்சிகளெல்லாம் முற்றுப் பெறாமலும் பூரணமடையாமலும் இருக்கின்றன.

இத்தகைய விஞ்ஞானிகள் கூறும் விஷயத்தை நாம் நம்புவதனால் அது நம்முடைய விவேகமின்மையைக் காட்டுகின்றது. அவர்கள் கற்பனை விஷயங்களை ஆதாரமாகக்கொண்டு ஆராய்ச்சிகளைத் தொடங்குகின்றார்கள்.

கேப்டன் ஸ்கோர்ஸ்பீன் சூக்ஷ்மயந்திரத்தின்மூலமாக ஒரு துளி தண்ணீரில் அசைந்து செல்லக்கூடிய 36450 ஜீவன்கள் இருக்கின்றன என்று கண்டுபிடித்துள்ளார். நம்முடைய ஞானிகள் ஒரு துளி தண்ணீரில் அசைந்து செல்லக்கூடிய ஜீவன்களல்லாமல் கணக்கிட முடியாத அசைவற்ற ஜீவன்களும் உண்டு என்று கூறியுள்ளார்கள். அவைகளெல்லாம் அல்ப ஞானிகளால் எவ்வாறு அறிந்து கொள்ள முடியும்?

தற்கால வைத்திய நிபுணர்கள் (Doctors) ஒரு கடலை அளவுள்ள இடத்தில் க்ஷயரோக சம்பந்தமான கிருமிகள் கணக்கிட முடியாததாய் இருக்கின்றனவென்று கூறுகின்றார்கள். ஆனால், ஒரு ஊசியின் முனை அளவுள்ள இடத்தில் அனந்த ஜீவன்கள் இருப்பதாகச் சர்வக்ஞனால் கூறப்பெற்றுள்ளது அவருடைய ஞானம் அற்புதமாயிருக்கின்றது. அவருக்கு எந்தவிதமான கருவியும் சாதனமும் தேவையில்லை. அளவில்லாத ஞானத்திலேயே எதையும் கண்டு அறிவிக்கின்றார்.

விஞ்ஞானிகள் முதன் முதலில் ஓர் ஊசி முனை அளவுள்ள இடத்தில் நூற்றுக்கணக்கான பரமாணுக்கள் இருக்க முடியும் என்று கூறினார்கள். ஆனால், இப்பொழுது சூக்ஷ்ம திருஷ்டி யந்திரத்தின் உதவியால் அதே இடத்தில் லக்ஷக்கணக்கான பரமாணுக்கள் இருக்க முடியும் என்று கண்டுள்ளார்கள். ஆனால், நம்முடைய முன்னோர்களான ஞானிகள் ஓர் ஊசி முனை இடத்தில் அனந்தா அனந்த பரமாணுக்கள், ஜீவன் ஆகியவை இருக்க முடியும் என்று கூறியுள்ளார்கள்.

விஞ்ஞானிகள் தங்களுக்குக் கிடைக்கும் சாதனங்களைக் கொண்டு ஆராய்ச்சி செய்கின்றார்கள். புதுப்புது சாதனங்கள் கிடைத்தால் புதுப்புது உண்மைகளை உணர்கின்றார்கள். பழைய கொள்கைகளை விட்டு விடுகின்றனர். அவர்களுக்கு ஏதாவது ஒரு விஷயத்தைப் பற்றிப் புதிய விளக்கம் கிடைத்தால் அதற்குத்தக்கபடி தங்கள் அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்கிறார்கள். அவர்கள் அவ்வாறு செய்வது மிகவும் ஒழுங்கானதே. ஏனென்றால் அபூர்ண ஞானமுள்ள மனிதர்கள் பூரண உண்மையை எவ்வாறு கூறமுடியும்? குறையுள்ளதை நிறையுள்ளதாக எண்ணுவதினால் என்னென்ன தவறுகள் ஏற்படுகின்றன? அதை அறிவாளிகள் சுலபமாகத் தெரிந்து கொள்ள முடியும்.

இந்தக் காரணத்தினால் முழு வஸ்துவின் உண்மையை அறிவதனாலும் உண்மையான ஞானத்தைத் தெரிவிக்கின்ற பரமாத்மனை வழிபடுவதாலும் மனிதன் ஏன் தவறு செய்வான்? இது நமக்குத் தெரியவில்லை. இதற்குக் காரணம் ஒன்றே ஒன்றுதான். அதாவது அவனுக்கு சம்சாரத்தில் சுழற்சி இன்னும் பாக்கி இருக்கின்றது. இதனாலேயே அவன் உண்மையைப் பொய்யென்று நினைக்கின்றான்.

—ஆருஹத தர்ம விளக்கம்.

# தற்கால விஞ்ஞானம்

இன்று விஞ்ஞானம் விரைவில் விருத்தியடைந்துகொண்டே வருகின்றது. அதனுடைய அபிவிருத்தியைப் பார்த்து ஜனங்கள் வியப்பையும் பயத்தையும் அடைந்துள்ளார்கள். நாம் பொறுமையோடு விசாரணை செய்வோமானால் இந்த விஞ்ஞான விருத்தியினால் சுகமும் சாந்தியும் விருத்தியடைந்தனவா என்பது விளங்கும். உண்மையில் அவைகள் விருத்தியடையவில்லை. உலகத்தில் உள்ளவற்றை அழிப்பதற்காகவே ஹஸ்திரங்களும் சஸ்திரங்களும் வேறு பொருள்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவைகளின் விருத்தியினால் உலகத்தில் விநாசமே ஒழிய வேறு எதுவும் காணப்படவில்லை.

நம்முடைய ரிஷிகளும் மகரிஷிகளும் இந்த எல்லா வஸ்துக்களையும் நன்றாக அறிந்திருந்தார்கள். அப்படியிருந்தும் அவர்கள் அவைகளை உபயோகப்படுத்தவில்லை. ஆத்ம உன்னதிக்குச் சாதனமான வழியை மட்டும் போதித்துச் சென்றார்கள். அதற்குக் காரணம் என்ன? ஜடவஸ்துக்களை உபயோகப்படுத்துவதால் பயங்கரமான நாசமும் ஆத்மாவின் மூல குணங்களின் கெடுதியும், தோஷமில்லாத பிராணிகளின் நாசமும் அதிகப் பணச் செலவும் வீணாக்காலம் கழிவதும் உண்டாகும் என்பது அவர்களுக்கு நன்கு தெரியும்.

இந்த விஷயம் எல்லார்க்கும் தெரிந்தது. ஓர் அணுகுண்டுவை உபயோகப்படுத்துவதால் லக்ஷக்கணக்கான ரூபாய் செலவழிகின்றன. ஒரு தேசம் அணுகுண்டுவை உபயோகப்படுத்துவதால் லக்ஷக்கணக்கான பிராணிகள் நாசமடைகின்றன; அந்த அணுகுண்டுவைச் செய்வதற்காக லக்ஷக்கணக்கான ரூபாய் செலவழிக்கின்றன. ஒரு தேசம் அணுகுண்டுவைத் தயாரித்து உபயோகப்படுத்தினால் வேறொரு தேசமும் அதே மாதிரி செய்ய ஆரம்பிக்கின்றது. அணுகுண்டுவைத் தயாரிக்க எவ்வளவு பணம் செலவாகின்றதோ அதில் தம்பிடிக்கூடத் திரும்பக் கிடைப்பதில்லை. சம்ஹாரமும் துவேஷ விருத்தியும் உண்டாகின்றன. இத்தகைய கொடுமையான ஆயுதங்களால் உலகத்திற்கு நன்மை ஏற்படாது. இந்த வீணான செலவுகளை நிறுத்தித் துக்கிகள் ஏழைகள் ஆகியவர்களின் மேம்பாட்டிற்காக இந்தப் பொருளைச் செலவு செய்தால் கோடிக்கணக்கான ஜனங்களுக்கு நன்மை உண்டாகும். இந்த விதமான விஷயத்தை அறிந்து யாவருக்கும் சொல்வது மிகவும் அவசியமானது.

யந்திர வாதத்தினால் இன்று ஆயிரக்கணக்கான ஜனங்கள் கஷ்டப்படுகின்றார்கள். மனிதர்கள் ஏழைகளாயும் சக்தியற்றவர்களாயும், தைரிய மற்றவர்களாயும் ஆகிவிட்டனர். இவைகளுக்குக் காரணம் யந்திர வாதம்தான். அதாவது எல்லா விஷயங்களையும் யந்திரங்களின் உதவியினால் செய்து கொள்ளுதல் யந்திர வாதம் எனப்படும். எவ்வளவுக்கெவ்வளவு சாதனங்கள் விருத்தி அடைகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு உலகத்தில் துக்கமும் சாந்தமின்மையும் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. பழைய காலத்தில் நம்முடைய தேசம் எவ்வளவு சுகமுள்ளதாயும், குறைவற்றதாயும் இருந்தது. தேசத்தில் எவ்வளவு சாந்தி நிலவிற்று. இன்று நாலா பக்கங்களிலும் பயத்தின் நிழல் காணப்படுகின்றது. உலகத்தில் சாந்தமின்மை தோன்ற ஆரம்பித்துவிட்டது. ஆனால், இப்பொழுது மனிதர்களுக்கு இந்த உண்மை இன்னும் விளங்கவில்லை.

ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன் இத்தகைய யந்திரங்கள் இல்லை. முன்னேற்றத்திற்கு அனுகூலமான சாதனங்களும் இல்லை. ஆனாலும், இப்பொழுது விஞ்ஞானத்திலும் என்ன என்ன விஷயங்கள் சித்தமாகின்றனவோ அவைகளெல்லாம் மகா பருஷர்களான ஞானிகளுக்கு முன்னமே தெரிந்திருந்தன.

நாம் சாஸ்திரங்களில் ஆகாயத்தில் செல்லும் விமானங்களைப் பற்றிப் படிக்கும்பொழுது அநேக ஜனங்கள் அதை நம்பாமல் பொய்யென்றும் கட்டுக்கதை என்றும் கூறினார்கள். ஆனால், இப்பொழுது உண்மையாகவே ஆகாய விமானங்களைப் பார்க்கும் பொழுது நம்முடைய முன்னோர்கள் எழுதியது உண்மைதான் என்று கூறுகின்றார்கள்.

ஜகதீஸ் சந்திரபோஸ் விஞ்ஞானக் கருவிகள் மூலம் வனஸ்பதி (மரம், செடி, கொடி புல் ஆகியவை) களில் ஜீவன் உண்டு என்றும், பிராணிகள் தங்கள் சுபாவத்தின்படி சுக துக்கங்களை அனுபவிக்கின்றன என்றும் அவை சிறிதாகவும் பெரிதாகவும் ஆகக் கூடுமென்றும் நிரூபித்த பிறகு வெளி நாட்டு விஞ்ஞானிகள் வனஸ்பதியிடத்தில் ஜீவன் உண்டு என்பதை நம்ப ஆரம்பித்தார்கள். ஆனால் நம்முடைய பழைய ஏட்டுப் பிரதிகளாயுள்ள

ஜைன சாஸ்திரங்களில் ஆயிரம் வருஷங்களுக்கு முன்னமேயே இந்த விஷயம் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

அநேக வருஷங்களுக்கு முன்பு ஜகதீஸ் சந்திரபோஸ் ஜெர்மனி தேசத்தில் வனஸ்பதியில் ஜீவன் உண்டு என்பதை நிரூபித்துக் காட்டும் பொழுது அந்தக்கூட்டத்தில் அவர் "இந்த விஷயம் எங்கள் நாடாகிய பாரத தேசத்திற்கு ஒரு புதிய செய்தியல்ல, எங்களுடைய முன்னோர்களும் மகா புருஷர்களுமான ஜைன ஆசிரியர்கள் என்ன கூறியுள்ளார்களோ அதையே நான் இப்பொழுது பிரமாண பூர்வமாக விளக்கியுள்ளேன்" என்று கூறி அதற்குத் திருஷ்டாந்தமாக ஆசாரங்க சூக்திரத்தையும் ஜீவாபிகம சூத்திரத்தையும் மேற்கோளாக எடுத்துக் கூறினார்.

ஜலகாயிக ஜீவன், வனஸ்பதி காயிக ஜீவன், ஓசையின் சக்தி, ரேடியோ, அணுகுண்டு, புகைப்படம் பிடித்தல் ஆகிய அநேக விஷயங்கள் நம்முன்னோர்களால் சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளன. அவைகளைத் தற்கால விஞ்ஞானிகள் கருவிகள் மூலம் பிரத்யட்சமாக (கண்கூடாக) விளக்குகின்றார்கள். தற்கால விஞ்ஞானம் பூரணமாயில்லை. இதனால் ஒவ்வொரு நாளும் புதுப்புது ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. விஞ்ஞானிகளும் தங்களுடைய கொள்கைகளை அடிக்கடி மாற்றிக் கொண்டே வருகின்றார்கள். சிலவருஷங்களுக்கு முன்பு அமெரிக்கா கண்டத்தின் சமீபத்தில் ஆயிரக்கணக்கான மைல்கள் நீளமும் அகலமும் உள்ள ஒரு நீண்ட விசாலமான தீவு தோற்றத்திற்குத் தென்பட்டது. அதைப்பற்றி இது வரையில் செய்து வந்த ஆராய்ச்சிகளெல்லாம் முற்றுப் பெறாமலும் பூரணமடையாமலும் இருக்கின்றன.

இத்தகைய விஞ்ஞானிகள் கூறும் விஷயத்தை நாம் நம்புவதனால் அது நம்முடைய விவேகமின்மையைக் காட்டுகின்றது. அவர்கள் கற்பனை விஷயங்களை ஆதாரமாகக்கொண்டு ஆராய்ச்சிகளைத் தொடங்குகின்றார்கள்.

கேப்டன் ஸ்கோர்ஸ்பீன் சூக்ஷ்மயந்திரத்தின்மூலமாக ஒரு துளி தண்ணீரில் அசைந்து செல்லக்கூடிய 36450 ஜீவன்கள் இருக்கின்றன என்று கண்டுபிடித்துள்ளார். நம்முடைய ஞானிகள் ஒரு துளி தண்ணீரில் அசைந்து செல்லக்கூடிய ஜீவன்களல்லாமல் கணக்கிட முடியாத அசைவற்ற ஜீவன்களும் உண்டு என்று கூறியுள்ளார்கள். அவைகளெல்லாம் அல்ப ஞானிகளால் எவ்வாறு அறிந்து கொள்ள முடியும்?

தற்கால வைத்திய நிபுணர்கள் **(Doctors)** ஒரு கடலை அளவுள்ள இடத்தில் க்ஷயரோக சம்பந்தமான கிருமிகள் கணக்கிட முடியாததாய் இருக்கின்றனவென்று கூறுகின்றார்கள். ஆனால், ஒரு ஊசியின் முனை அளவுள்ள இடத்தில் அனந்த ஜீவன்கள் இருப்பதாகச் சர்வக்ஞனால் கூறப்பெற்றுள்ளது. அவருடைய ஞானம் அற்புதமாயிருக்கின்றது. அவருக்கு எந்தவிதமான கருவியும் சாதனமும் தேவையில்லை. அளவில்லாத ஞானத்திலேயே எதையும் கண்டு அறிவிக்கின்றார்.

விஞ்ஞானிகள் முதன் முதலில் ஓர் ஊசி முனை அளவுள்ள இடத்தில் நூற்றுக்கணக்கான பரமாணுக்கள் இருக்க முடியும் என்று கூறினார்கள். ஆனால், இப்பொழுது சூக்ஷ்ம திருஷ்டி யந்திரத்தின் உதவியால் அதே இடத்தில் லக்ஷக்கணக்கான பரமாணுக்கள் இருக்க முடியும் என்று கண்டுள்ளார்கள். ஆனால், நம்முடைய முன்னோர்களான ஞானிகள் ஓர் ஊசி முனை இடத்தில் அனந்தா அனந்த பரமாணுக்கள், ஜீவன் ஆகியவை இருக்க முடியும் என்று கூறியுள்ளார்கள்.

விஞ்ஞானிகள் தங்களுக்குக் கிடைக்கும் சாதனங்களைக் கொண்டு ஆராய்ச்சி செய்கின்றார்கள். புதுப்புது சாதனங்கள் கிடைத்தால் புதுப்புது உண்மைகளை உணர்கின்றார்கள். பழைய கொள்கைகளை விட்டு விடுகின்றனர். அவர்களுக்கு ஏதாவது ஒரு விஷயத்தைப் பற்றிப் புதிய விளக்கம் கிடைத்தால் அதற்குத்தக்கபடி தங்கள் அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்கிறார்கள். அவர்கள் அவ்வாறு செய்வது மிகவும் ஒழுங்கானதே. ஏனென்றால் அபூர்ண ஞானமுள்ள மனிதர்கள் பூரண உண்மையை எவ்வாறு கூறமுடியும்? குறையுள்ளதை நிறையுள்ளதாக எண்ணுவதினால் என்னென்ன தவறுகள் ஏற்படுகின்றன? அதை அறிவாளிகள் சுலபமாகத் தெரிந்து கொள்ள முடியும்.

இந்தக் காரணத்தினால் முழுவஸ்துவின் உண்மையை அறிவதனாலும் உண்மையான ஞானத்தைத் தெரிவிக்கின்ற பரமாத்மனை வழிபடுவதாலும் மனிதன் ஏன் தவறு செய்வான்? இது நமக்குத் தெரிவதில்லை. இதற்குக் காரணம் ஒன்றே ஒன்று தான். அதாவது அவனுக்கு சம்சாரத்தில் சுழற்சி இன்னும் பாக்கி இருக்கின்றது. இதனாலேயே அவன் உண்மையைப் பொய்யென்று நினைக்கின்றான்.

—ஆருஹத தர்ம விளக்கம்.

# ஆசிரியரின் திருப்பயணமும் திருக்கழுக்குன்ற விழாவும்

கடமை யுணர்ச்சி:

ஆசிரியர் தம் மாணவர் அன்பர்களுடன் பாடல் பெற்ற திருவூர்களையெல்லாம் ஆண்டு தோறும் பகுதி பகுதியாகச் சென்று வழிபட்டு வாய்ப்புக் கேற்ப மெய்ந் நெறித் தொண்டு களையும் வாழ்க்கையியல்தொண்டு களையும் (பிரசாரம்) செய்து வருகிறார்கள். அவர்கள் திருப் பயண நோக்கங்கள் இன்னின்ன என ஒரு பட்டியலே போட்டுக் காட்டலாம்.

ஆயினும் அதனுடைய முதன்மையான நோக்கம் இது தான் என்று அன்பர்களுக்குச் சுட்டிக் காட்டவேண்டியிருக்கிறது; மற்றவை துணை நோக்குகள். அமைந்தவரை பார்த்துக்கொள்ள வேண்டியவை. முதல் நோக்கத்தைத் தக்கபடி நிறைவேற்ற உடன் செல்லும் அன்பர்களும் அங்கங்கே யுள்ள சைவத் தமிழ்ப் பெரு மக்களும் முயலவேண்டியது கடமையாகும்.

பயண நோக்கம்:

திருப்பயணத்தை ஆண்டு தோறும், ஆசிரியர், திருக்கழுக் குன்றத்தில் நடைபெறும் ஆனி மகத் திருமுறைப் பெருவிழாவுக்கு முன் மேற்கொள்ளுகிறார்கள். ஏன்? அவ் விழாவின் வழி, அருளியல் உலகியல் ஆக்கங்களை உண்டாக்கத்தான். திருக்கழுக் குன்ற விழா, சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் சார்பில் நடைபெற்று வருகிறது. குருகுலம் அவ் விழாவில் கருத்தும் பற்றியும் உடையது.

கழுக்குன்ற விழா:

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு மிகவும் அடிப்படை அந் நாட்டுச் சமயமும் மொழியுமே ஆகும். திருக்கழுக்குன்ற விழா இவ்விரு துறையிலும் இப்போது இந் நாட்டுக்கு வேண்டிய வளர்ச்சியையும் மறுமலர்ச்சியை உண்டாக்கும், உண்டாக்கவேண்டும் என்று ஆசிரியரவர்கள் எண்ணுகிறார்கள். அதற்கேற்ற அடிப்படை நலங்கள் அவ் விழாவிலும், அது நடைபெறும் பதியிலும் அமைந்திருக்கின்றன.

விழாவின் வளர்ச்சி:

திருவருளாலும், அன்பர்களின் இணக்கம் முயற்சி இவைகளாலும் விழா ஆண்டுக்காண்டு சிறப்புற்றே வருகின்றது. நாட்டின் முன்னேற்றத்துக்குப் பயன்படும் வகையில் அது இன்னும் பல வளர்ச்சி நிலைகளை அடையவேண்டியிருக்கிறது. திருக்கழுக்குன்ற விழா தென்னாட்டு விழா என்னும் நிலையை அடைந்து வருகின்றது. அதனுடைய நிகழ்ச்சிகள் அனைத்திந்திய வானொலியில் ஆண்டு தோறும் அஞ்சல் செய்யப்பட வேண்டும். உரிய விளம்பரத்தை இந்நாட்டுச் செய்தித் தாட்கள் படங்களுடன் அதற்குக் கொடுக்கவேண்டும். தமிழ்ச் சைவப் பெருமக்கள் அனைவரும் அதிற் கருத்து வைத்து ஈடுபட வேண்டும். திருமுறை இசை விழா திருக்கழுக்குன்றத்திற் சிறக்க வேண்டும். திருமுறை ஓதும் இருவினர் அனைவரும் முன் வந்து அவ் விழாவிற் கலந்துகொண்டு திருநெறித் தமிழிசை வளர்ச்சிக்கு ஆனவற்றை ஆய்ந்து கொண்டு செயலாற்ற வேண்டும். திருமுறைகட்குக் கொடுக்க வேண்டிய மதிப்பு, சமயச் சீர்திருத்த வளர்ச்சி, அதன் வழி வாழ்க்கைப் பேறு முதலியன பற்றித் தமிழ்ச் சைவப் பெருமக்கள் அனைவரும் அங்கே கூடிப் பேசி முடிவுகள் செய்து நிறைவேற்றவேண்டும். அருளியல் நிகழ்ச்சிகள் மட்டுமே அல்லாமல், தமிழ்ச் சார்பானவர்கள் இன்று சமயச் சார்பாகக் கேட்கும் கேள்விகளை, கொண்டுள்ள ஐயங்களைப், போக்கும் அறிவியல் நிகழ்ச்சிகளும் அவ் விழாவில் அமையவேண்டும் அதில் இயல் இசை நாடகமென்னும் முத்திறக் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறக்கூடும்.

வளர்ச்சிக் கருக்கள்:

எந்த ஒன்றும் சிறப்பதற்குப் பருமையும் நுண்மையுமான பல உலகியல் அருளியல் ஆற்றல்களின் துணை வேண்டியிருக்கிறது. பழைய சிறப்பும், மரபு உரமும், புதிய மறுமலர்ச்சியும் வளர்ச்சிக்குப் பின்னும் பெருநலம் செய்யும். இவை யெல்லாம் வளர்ச்சிக் கருக்கள்.

---

Telegrams: "RAMBROS"

**N. Ramu Bros,**

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

இவைமேலே குறிப்பிட்டபடி அவ் விழாவிலும் பதியிலும் இருக்கின்றன.

விழா மாட்சிகள்:

சங்க காலத்திற்குப்பின் தமிழ் மொழியில் ஒரு மறுமலர்ச்சியையும், தமிழ்ப் பண்பாட்டில் சைவத் திறத்தையும் கண்டு பிற்காலத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக் கெல்லாம் வித்திட்டவரும், சிவம், சைவம் என்னும் சொற்களையே முதன் முதற் கையாண்டு தென்னாட்டைச் சைவ நாடாக்கிப் பெருமைப் படுத்தியவரும் மாணிக்கவாசகரே என்று தமிழ்ப் பேரறிஞர்கள் கூறுகிறார்கள். திருக்கழுக்குன்ற விழா அவர் நாளில் நிகழ்கிறது. திருமுறை விழா எங்கும் அவர் நாளில் நிகழ்வதில்லை.

வேற்றவர் வரவும், இயற்கைக்கு மாறான அவர்தம் கொள்கைகளும், மொழியும், இந் நாட்டில் நிலைக்கத் தொடங்கிவிட்ட காலத்தில் தோன்றி, இந்நாட்டு மொழிச் செல்வாக்கும், கொள்கைத் தெளிவும், அருள் ஒருமையும் இயற்கைப் போக்கும் அழிந்துவிடாதபடி காத்துதவிய பெருமை திருமுறைகளுக்கு உண்டு. அத்தகைய திருமுறைகளுக்கே விழாவும் விளக்கமும் கழுக்குன்றத்தில் செய்யப் பெறுகின்றன.

எதையும், நுட்பமாகவும் திட்பமாகவும் ஆழமாகவும் விரிவாகவும் எண்ணி வகைப்படுத்தித் தெரிவித்துச் செய்விக்கும் குணநலமும் அறிவுத் தெளிவுமுடையவர்களும், இணக்கமாகவும் பயபத்தியாகவும் கட்டுப்பாடாகவும் இருந்து தெரிவித்தாங்குச் செய்ய முயலும் திருத்தொண்டர்களும், ஆன்றோரின் எண்ணங்களைச் செயற்படுத்தும் தொண்டர்கட்குத் தம்மாலியன்ற அளவு முன்வந்து பொருள் முட்டுப்பாடு நேராது வழங்கி ஊக்கமூட்டுஞ் செல்வர்களும் ஆகிய முத்திறத்தவரும் ஒன்றுபட்டுக் காலமும் இடமும் கண்ணியமும் கருதிச் செய்தால் விளையும் நல்லுணர்ச்சிகளும் பயன்களும் பெரியவாகவே இருக்கும். இவ்வகையில் ஆசிரியர் இளவழகனாரை உள்ளிட்ட ஆன்றோர்களும், சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தாரும் குருகுலத்தாரும் வேறு பல நல்லமைப்பினரும், வண்ணை சிவத்திரு வள்ளியம்மையார், தாசன் ஸ்டூடியோ உரிமையாளர் திரு. எம். ஆர். சம்பந்த நாயகர் முதலியோரை உள்ளிட்ட சைவச் செல்வர்களும் முன்னின்று அருளடிப்படையில் செய்து வரும் விழா ஆண்டுக் காண்டு சிறந்தே வரும் என்பதில் ஐயமென்ன?

கழுக்குன்றச் சிறப்பு:

திருமுறை விழாவுக்கு ஏற்ற இடம் திருக்கழுக்குன்றமே என்று முடிப்பதற்குள்ள காரணங்கள் பலவாகும்.

குழப்பங்களை எளிதாகத் தெளிவு செய்யும் திறம் சான்றோர்களுக்கே உண்டு. இந்நாட்டுக் குழப்பங்களை இடைக் காலத்தில் தெளிவு செய்த சான்றோர்களே நால்வர் பெருமக்கள். அவர்களின் அருள் வாக்குகளே திருமுறைகள். அவைகளுக்கு விழாச்செய்கிறபோது, சான்றோர் நாடு எனப் பெயர் பெற்ற தொண்ட நாட்டில், அந் நால்வர் [illegible]லும் பின் வந்தோர் [illegible] ஒப்பற்றதாகவுள்ள திருக்கழுக்குன்றத்தில் செய்வது எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது!'

திருமுறை விழாவுக்குச் சிறப்பிடம் தில்லையே என்று சொல்லலாம். சில வரலாற்று நிகழ்ச்சிகளைக் காட்டி; திருமுறைகளின் இருப்புக்குரிய மூல அருவ இடம் தில்லையே; ஆனால் திருமுறைகளை ஓதித் துதிப்பதற்கேற்ற அருவுருவ உருவத் திருப்பதி திருக்கழுக்குன்றம் என்பதும் அறிதல்வேண்டும்.

—ந. ரா. ஆடலரசு.

(வரும்)

Phone. 55034 Tel. Enkayam

கைத்தறி ஆடைகளில்

சிறந்தது எங்கள் எலிபெண்ட் கிசான் டிரேட்மார்க்




பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53 கிடங்குத் தெரு, சென்னை 1.

(3ம்- பக்கத் தொடர்ச்சி)

தேரழுந்தூர் (நிலை):
திருவழுந்தூர் 2 கல்.

குற்றாலம் (நிலை):
திருத்துருத்தி $\frac{1}{2}$ கல்.
திருஎதிர்கொள்பாடி
(மேலைத் திருமணஞ் சேரி)
$2\frac{1}{2}$ கல்.
கீழைத் திருமணஞ்சேரி $2\frac{3}{4}$ கல்.
திரு வேள்விக்குடி $2\frac{1}{2}$ கல்.
திருப்பந்தணை நல்லூர்
(பந்தநல்லூர்) 6 கல்.

(5) திருவாவடுதுறை ஆதீனம்:

நரசிங்கன் பேட்டை(நிலை):

திருவாவடுதுறை $\frac{1}{2}$ கல்.
திருக்கோழம்பம் $2\frac{1}{2}$ கல்.
திருக்கஞ்சனூர் $1\frac{1}{2}$ கல்.
திருக்கோடிகா 2 கல்.

ஆடுதுறை (நிலை):

தென்குரங்காடுதுறை 2 கல்.
திருமங்கலக்குடி $2\frac{1}{2}$ கல்.
திருநீலக்குடி
(தென்னல் குடி) 3 கல்.
வைகல்
(மாடக் கோயில்) 4 கல்.
கருவிலிக் கொட்டிடை 6 கல்.
திருவன்னியூர்
—கருவிலி சமீபம் 3 கல்.
சிறுகுடி
—வன்னியூர் சமீபம் $\frac{1}{2}$ கல்.
திருநல்லம்
(கோனேரி இராசபுரம்)
9 கல்.

(6) திருவிடைமருதூர் (நிலை):

திருவிடை மருதூர் $\frac{1}{2}$ கல்.
திருவியலூர்
(பண்டாரவாடை) 4 கல்.
திருந்துதேவன்குடி 5 கல்.

(7) திருநாகேஸ்வரம் (நிலை):
திருநாகேச்சுரம் $\frac{3}{4}$ கல்.

(கும்பகோணம் நிலையத்தி
லிருந்து (பஸ்);

திருப்பனந்தாள் 11 கல்.

# யாத்திரை பற்றிச் சில குறிப்புகள்

## என் கருத்து

வணக்கம்!

யாத்திரையில் கட்டுப்பாடும், பொறுப்பும், உணர்ச்சியும், தொண்டுள்ளமும், அன்பும் கண்ணியமும் முதன்மையாகத் திகழவேண்டும்.

குருகுல யாத்திரையில் குருகுலத் தொண்டர் குழாம் தொண்டாற்றுவதற்குக் கீழ் வருமாறு அமையலாம்.

யாத்திரையில் ஆடவர்கள் ஒரு வரிசையாகவும், மாதர்கள் ஒரு வரிசையாகவும் எங்கும் இருப்பதற்கு, வரிசை ஒழுங்கைக் கவனிக்க இருபாலாரிலும் இரண்டிரண்டு பேர் பொறுப்பாக்கப்பட வேண்டும்.

குருகுலப் பெயர்க் கொடிகளைத் தாங்க இருவரும், அடையாளக் கொடி ஏந்த ஒருவரும் வேண்டும்.

வழிபாட்டுப் பண்டங்களை வாங்கி வைத்துக்கொண்டு வழிபாட்டை அளவான நேரத்தில் நடத்தி வைப்பதற்கு இருவர்.

வரவு செலவுப் பொறுப்புக்கு ஒருவர்.

நூல் விற்பனை, இதழ் விற்பனை முதலியவற்றிற்கு ஒருவர்.

போக்கு வரவு வசதிகளைக் கவனிக்க இருவர்.

பேச்சுக்களை எழுத இருவர்.

எழுதியவற்றைத் தொகுத்து அவ்வப்போதும் நாளிதழ் கிழமை இதழ்களுக்கு அனுப்பி வெளியிடுவித்து வர இருவர்.

அஞ்சல் வகைகளைக் கவனிக்க ஒருவர்.

முகவரித் தொகுப்புக்கு ஒருவர்.

உணவுச் சிக்கல்களில் உதவி செய்ய இருபாலாரிலும் ஐந்தைந்து பேர்.

விரிவுரை நிகழ்ச்சிகளைக் கவனிக்க இருவர்.

அந்தந்த ஊர்களின் தேவைகளை அறிந்து அங்கங்கும் மக்கட் பணி செய்விக்க இருவர்.

ஆசிரியர் நிலைகளைக் கவனிக்க ஒருவர்.

குருகுல நோக்கில் அங்கங்கும் அணுகும் அன்பர்களைக் கவனிக்க நால்வர்.

பொதுக் கண் காணிப்புக்கு மூவர்.

ஆக நாற்பதின்மர் பணி ஏற்கலாம். அவரவரும் அவரவர் பணிக்கே பொறுப்பாய் இருக்க வேண்டும். பொதுக் கண்காணிப்பாளர், பலவும் கவனிக்கலாம்; அதாவது, கருத்தாக மேற்பார்த்து அவரவர்களைக் கொண்டு அவ்வப் பணிகள் தகுதியாக நிகழக் கவனித்துக் கொள்ளுதல்.

பணிவுள்ள,
—ந. ரா. ஆடலரசு.

---

திருச்செய்ஞலூர்
திருப்பனந்தாளிலிருந்து
3 கல்.
திருஆப்பாடி 2 கல்.

(8) கும்பகோணம் (நிலை):
திருக்குடமூக்கு 1 கல்.
திருக்குடந்தைக் காரோணம்
(மாமகக் குளத்துக்கரை)
குடந்தைக் கீழ்க்கோட்டம்
$\frac{1}{4}$ கல்.
திருக்கொட்டையூர் 2 கல்.
சிவபுரம் (சண்பகச் சோலை)
$3\frac{1}{2}$ கல்.
கலயநல்லூர் (சாக்கோட்டை)
$3\frac{1}{2}$ கல்.
அரசிற் கரைப் புத்தூர்
(அழகர் புத்தூர்)
$4\frac{1}{4}$ கல்.
(இயலும் வேறு தலங்கள்)

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர், தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம், மதுராந்தகம். (அஞ்)